Distribution of coffee seeds

*252 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the arrangements that have been made to distribute coffee seeds to the residents of Madras?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பெங்களூரில் தலைமையிடத்தைக் கொண்ட காப்பி வாரியம் காப்பிக்கொட்டைகள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்கிறது. இதில் மாநில அரசாங்கத்திற்கு எத்தகைய பொறுப்பும் இல்லை.

திரு கே. விநாயகம்: அது ஒருவேளை ஆல் இண்டியா காஃபி போர்டு வேலையாக இருக்கலாம். சென்னையிலே காஃபி சீட்ஸ் மக்களுக்குக் கொடுப்பது யார்? அது அத்திய வசியமாக இருப்பதாலே காஃபி வாரியமே எவ்வளவு இந்த நாட்டு மக்களுக்கு வேண்டும் என்று தெரிந்து அந்த அளவுக்கு ஸ்டாக் வரவழைத்து அவர்களுடைய ஏஜென்சி மூலமாக ஒழுங்காகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சென்னை அரசாங்கம் சென்னைக்கு எவ்வளவு வழங்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறது. காஃபி போர்டு மத்திய அரசுக்கு அது சம்பந்தமாக சிபார்சு செய்திருக்கிறது.

Boat Building Yard

*253 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether there is any proposal under the consideration of the Government to shift the Boat Building Yard from Marina?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஆம்.

திரு. டி. மார்டின்: படகுகளை அரசு வழங்குகின்ற பொழுது ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள் குழுத் தலைவர்களோடு. ஆனால் ஒப்பந்தங்களை மீறுகின்ற நேரத்தில் தகராறுகள் ஏற்பட்டால் படகுகளை உபயோகப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. எனவே, அப்படிப்பட்ட தகராறுகள் ஏற்படுகிற பொழுது அந்தத் தகராறுகளைத் தீர்க்கின்ற முறையில் அந்தப் படகுகளையும் நல்ல முறையில், வேலை செய்யக் கூடிய முறையில் வழி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஒரு திட்டம் கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது மெரீனா கடற்கரையில் போட் யார்ட் பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

திரு வ. ஜார்ஜ்: அமைச்சர் அவர்கள் படகு கட்டும் துறையை மாற்றப் போவதாகக் கூறினார்கள். அப்படிச் செய்யும் பொழுது குடிசைகளையும் கல்லறைத் தோட்டங்களையும் அப்புறப்படுத்திக் கடற்கரையை நல்ல முறையிலே பாதுகாக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பாதுகாப்பு செய்யப்படுகிறது.

திரு. கே. விநாயகம்: மெரீனா கடற்கரையில் உள்ள போட் பில்டிங் யார்டை எந்தக் காரணத்திற்காக அகற்றுகிறார்கள்? எந்த இடத்திலே அதை அமைக்க உத்தேசம் இருக்கிறது? இதன் விளைவுகள் என்ன? ஏற்கனவே வாழ்ந்து வருகிற மீனவர்களுடைய போட் பில்டிங் ஆக்டிவிடீஸில் நீங்கள் தலையிடுவது நியாயம் தானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு கேள்விகளைக் கேளுங்கள்!